உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவருடபிரகாச வள்ளலாரெனனும

சிதம்பரம்

# இராமலிங்கசுவாமிகள்

# பிள்ளைத்தமிழ்.

இஃது

சமரசவேத சன்மார்க்க சங்கவித்வான்களிலொருவராகிய

புராணிகர்

பொ. சுந்தரம்பிள்ளை யவர்களால்

இயற்றப்பட்டு,

சமரசவேத சன்மார்க்க சங்கத்தி லொருவராகிய

பிருங்கிமாநகரம்

இராமசாமிமுதலியாரவர்களால்

சென்னை:

ஆல்பெனியன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1893.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சாற்றுகவிகள்.

சென்னைக்கவரன்மெண்டு

நார்மல் பாடசாலைத் தமிழ்ப் புலவராயிருந்த

சோடசாவதானம்

தி. க. சுப்பராய செட்டியாரவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடில் விருத்தம்.

சீர்வளருந் தென்வடலூர்ச் சிவஞானத்
தெள்ளமுதந் தெவிட்டவுண்ட
பேர்வளரு மிராமலிங்கப் பிள்ளைமே
லப்பெயர்கொள் தமிழைச்சொன்னான்
தேர்வளரும் பலகலையின் றேர்ச்சியினாற்
சிவபுராணங்க ளோர்ந்தே
ஏர்வளரு முபந்நியாசஞ் செய்யுஞ்
சுந்தரனுமியல் வல்லோனே.

அஷ்டாவதானம்

## பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

கலியுகத்தின் வயத்தினையுங் காலன்றன்
    றாத்தினையுங் காற்கீழாக்கிக்
கருணைவளர் சிவானந்தக் கடற்பெருக்கித்
    திருவருளின் காட்சிநோக்கி
மலியுமர மண்மலையா தியுமுருக்கி
    மன்புமயம் வாய்ந்த பாக்கள்
மகிழ்ந்தளித்த நமராம லிங்கமுனி
    வரனருகும் வள்ளன் மீது
சொலியுவந்தான் செந்தமிழி லுளநயங்க
    ளவ்வளவுந் துலங்கித் தோன்றத்
துதிகவிஞர் சிரமேற்கும் புகழ்பிள்ளைத்
    தமிழெனுநூல் முனி சூதன்போற்
பொலியுஞ்சொற் புராணிகப்பேர் கொண்டுசைவப்
    பிரசங்கம் புகல வல்ல
பொன்னேரிக் கருணீகர் மரபின்வரு
    சுந்தரநற் புலவன் றானே.

இந்நூலாசிரியர் மருகராகிய சைவப்புராணிகர்

## சிதம்பரம் - வடிவேல்பிள்ளை யவர்கள்

இயற்றியது.

அன்பின்மய மானவருளுருவாகி
    யன்பர்மனத்து மலையாக்கும்
அரியதிரு வருட்பாவினருமை யெவ
    ருரைப்பரின்ப மளித்து ஞான
வின்பதனு ளிலைறந்தவருட் பிரகாச
    வள்ளலெனு மிராம லிங்க

மெங்கள்குரு தேசிகன்றன் சீர்த்தியெலா
மடியார்க ளேத்திப் போற்ற
மன்புகழுஞ் செந்தமிழா மொருபிள்ளைத்
தமிழதனுள் மாண்பு வாய்ந்த
வண்மைபெறு மலங்கார கற்பனைக
ளாதிநய மலிந்து மேவ
மின்பொலியுஞ் சடைமவுலிச் சரிதமது
யாவருக்கும் விளங்கக் கூறும்
வியனகர்பொன் னேரியுறு சுந்தரநற்
புலவன்றன் விளம்பி னானால்.

இந்நூலாசிரியர் குமாரர்

## பொ. பரமசிவம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

அருண்மயமாஞ் சமயகுர வர்களனல்வ
ரருளுருவா யவனி தோன்றி
யரும்பாவுக் கரசான விராமலிங்க
வரியவள்ள லன்பாற் சொன்ன
தெருள்வளர்நற் றிருவருட்பாவெனு மாறு
முறைகளினாற் றெளிந்த ஞானச்
சிவபத்தி காருண்யம் வளர்த்தவருட்
பிரகாசச் செல்வன் மீதே
மருவுபல சொன்னயமும் பொருணயமுந்
தொடைநயமு மருவவாரு
மகிழ்பிள்ளைத் தமிழெனுமோர் பிரபந்த
நவரசமு மலியச்சொன்னா
னருமறையாக மப்பொருளாம் புராணகதை
யன்பர்களுக் கன்பாற்கூறும்
மண்ணல்சுந் தரக்கோமா னவனடிக
ளென்சிரசிற் கணிகளாமால்.

# இந்நூலச்சிட்டார் சிறப்பு.

## நிலமண்டிலவாசிரியப்பா.

சீர்மை நீங்காத் திருவளர்ந் தோங்கிப்
பேர்வுறு வயற்பாற் பேராப் பசும்பாம்
புருக்கொணற் சூலுயர் விலார்திருவெனத்
தருக்கித் தேர்ந்தோர் தம்பாற்கல்வி
நிரம்பினர் போற்றலை நீட்டமுறூது
வரம்புறு வயற்குள வளர்ந்துறக் கண்டு
கண்ணெனக் குவளை கட்ட லோம்பினூர்
வண்ணவாண் முகமென மனையி னுள்புகார்
பண்ணெழுத் தியல்படப் பரப்பியிட்டனர்
தண்வயலுழவர் தந்தன்மை யிதுவெனுஞ்
சீவக சிந்தாமணிச் செய்யுட் கொத்து
பாவிற் சிறந்த பாட்டுடைக் கம்பன்
பெண்கள் பானேயம் வைத்தோர் பிழைப்பரோ
எண்ணமிற் சிறியரென் றுரைத்தநூற்
பலகவி பொருளுக்குற மதுபார்ப்போர்
புலமிலாப் பிள்ளைக்கவி யெனும்புன்கவிப்
பாட்டல மேற்கோட் பாட்டெனக் கொண்டு
நாட்டுவரறிஞ ரதுபோனயமிலேன்
பிள்ளைத்தமிழிற் பிதற்றிய பொருள்வளம்
பிள்ளைக்கவிபோற் பேசாதுட் கொளீஇ
திருவருட் ப்ரகாச வள்ளற் றிருத்தமிழ்த்
திருவருட்பாவெனத் திரட்டிய வொன்றைத்
திருவருட்பாவாந் திருமுறைத் திரட்டென
வொருபெயர் கொளச்செய் தொப்பினூலதனை

யெழுதா வெழுத்தி லேற்றியந்நூற்
பழுதா காமற் பாங்குடன் வெளியிட்
டன்புடன் வாழு மறிஞன் பிருங்கி
தன்மலை தன்னூ ரென்னுந் தன்மை
பராமுக மின்றிப் பரவப் பார்த்திடும்
இராம சாமிநல் லினியவே ளாளன்
கண்ணுடை வள்ளல் கருதாப் புறநெறி
வண்மை வாது வென்றசம் பந்தன்
உருவகந் தன்னையுருகிப் பணிந்து
கருணை யுருப்பெற் றதுபோல் வள்ளல்
அருட்பா வதனை யன்பா லோதி
மருட்பாங்குடைய மனங்கரைந்துருகித்
திருவருட் பாவாந் திருமுறைத் திரட்டின்
ஒருமுகந் தனிலரு ளுருவொன் றிருத்தி
என்போ லியர்க்கு மெளிதெனக் காட்டிய
அன்புடை யாள னறிவிலே னுரைத்த
பிள்ளைத்தமிழிளம் பிள்ளைத்தமிழெனத்
தள்ளாதுகொண்டு தந்துரைக்கினிய
ஆல்பே னியின்பிரஸ் ஆங்கதிலேற்றி
நூல்வெளியாக்கின னுண்ணறிவாளனே.

இஃது

இந்நூலாசிரியரியற்றியது.

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## விநாயகர் துதி.

### விருத்தம்.

கார்கொண்ட மேனிக் கரும்பனைக் கைக்களிறு
கண்டுரித்தது பரித்த
கனகசுள வுருவாகு முக்கட் கரும்பினைக்
கண்பொத்தி விளையாடல்செய்
வார்கொண்ட முலையம்மை காமாட்சியாடன்
வளைத் தழும்பொடு முலைக்கண்
வளமுறப் பெற்றருட் டிருமேனி யங்ஙனே
வாடிக் குழைந்திடப்பெற்
பேர்கொண்டவருளுருக் கொண்டோங்கு சிவபிரான்
எந்தையருளும்ப வுருவாம்
இன்ப வநுபவ வருட் பிரசன்னமாம் ப்ரணவ
விசனைப் போற்றி நிற்பாம்
தேர்கொண்ட நடராஜர் கோபுர வடப்பார்வை
தெரியுமே வடபாலெனத்
தேர்ந்தோது திருவருட் பிரகாசவள்ளற்
றிருத்தமி ழெடுத்தோதவே.

# காப்புப்பருவம்.

## திருமால்.

சீர்வளர் பராபரை யதிற்பரந் தோன்றுமதில்
சிவமதிற் சத்தியதிலே
செம்மையுறு நாதமதில் விந்துவதிலுயர் சதா
சிவமதில் மகேசுரத்தில்
பேர்வளர வந்துறு முருத்திரனதிற்பெரிய
பெருமைவளர் சித்தில் சிறிதும்
பிறேறத் தோன்றியது யதுவாதல் முத்திநிலை
பேசுமொரு சித்தாந்தமே
நேர்நிலை யெனுங்கரிய மாற்பதங் கருதியே
நேர்பணிந் திடுதல் செய்வாம்
நித்தியவருட் ப்ரகாசத் தலைமை யெங்குமே
நீண்டொளி விரித்தோங்குநற்
றூயவளர சடாமுடிப் பெருமானுருக்கொளெஞ்
சாமி குருசாமி வடலூர்
தன்னருளி ராமலிங்கப் பிள்ளை தன்னையே
தயவுடன் காத்திடுகவே. (க)

## பரசிவம்.

நந்து மைம்பூத பௌதிக மேலாமோங்கவே
நாடு மைந்தொழி லியற்றும்
நாயகமெனுந் தேவரைவ ரதிகாரவினை
நாடிப் பரிந்தொடுக்கும்
விந்து சிவதத்வம் பரத்தினி லொடுக்குதலை
வேண்டு பரசிவமந்நனை

விரிபொருளனைத்து மருளுருவாய்விளக்குமவ்
விமலனடிபோற்றி நிற்பாம்
பந்தமுறு மாறத்துவா முதலடக்கிவளர்
பரதத்து வாதீதமேற்
பரவுரு சிவாநந்த வெள்ளந்ததும்பிமேற்
பாய்ந் தொழுகு மங்கள முறாவுஞ்
சிந்தையி லுறுஞ்சிவ ஜெகபரமவ் வருளுருச்
செம்பொருளதாக வமருந்
திண்மை வடலூ ரருட்பிரகாச வள்ளலெஞ்
சேயைப் புரக்க வென்றே. (உ)

## சிற்சத்தி.

திருவருட் பிரகாச ஞானவன றன்னிலே
தெளிவிலஞ் ஞானமுழுதுந்
தேய்ந்துறச் சுட்டுவெறு வெளியாஞ் சிவத்திலே
சேர்க்கு மருளுருவாகியே
உருவளர்ந் தோங்குசிவ ஜீவமது தானாகி
யோங்கு மெய்ஞ்ஞான மகவா
துயர்ஞான வமிர்தத்தை யுண்டருளி யென்னுளே
யோங்கியருள் சத்யஞானம்
மருவுமுயர் சீவன் முத்தனாயே வளர்த்தோங்கி
வாழுமொரு சிற்சத்தியை
மறவாதிருந்து தொழுதேத்துவா மென்னருமை
மாணிக்க மொத்துயர்ந்து
வருமருளி ராமலிங்கப் பெயர்கொள் மெய்ஞ்ஞான
வள்ளல் வடலூரிருந்து
வாழுமுயர் மெய்ஞ்ஞான வாழ்வையருள் சுய்ஞ்ஞான
மைந்தனைக்காக்க வென்றே. (௩)

முருகவேள்.

செவ்வேளெனுந்தொடர் முன் மொழியொரு பொருட்
குணஞ், சேரவதி னிறுதிமொழியே
செம்மை நலமுறு நற்குணிப்பொருளதாகமருள்
சேர்ந்துலவு மதனலனெனும்
அவ்விய மிலாப்பொருட் பண்புடமை பெறவளரு
மப்பன் முத்துவி தானனத்
தாநந்த முறுமதோ முகநடுப் பிரணவ
வதிதனடி போற்றி நிற்பாம்
செவ்விய மறைப்பொருட் சொற்பொருளதாகிவளர்
சிவஞான சித்தர் கணமே
செய செய வெனப்போற்றி நாளும் பரிந்துவாழ்
செல்வச்செருக் குடையனைத்
திவ்ய வுறவாக்கியே ஜெகமெலாம் பரவுமவர்
தீவினை யகற்றி வடலூர்
தெளிவுடை யிராமலிங்கப் பிள்ளை தன்னையே
தேடிப்புரக்க வென்றே. (அ)

சித்திவிநாயகர்.

எள்ளா வடலூரிலிருந்து மருள்
அள்ளாத வருட் பிரகாசனையே
தள்ளாது புரந்தருள் சித்திதரும்
பொள்ளாப் பொருளையக போதகனே. (ரு)

நீறு.

மாதங்க மகலாத மாதேவனெற்றிவிழி
மாப் பெருவனற் கொளுத்த
மன்னிவளர் புவனங் கணீருயரன்றிரு
மணித் திருவுடற் பூத்தநன்

மாதங்க மொத்துயர்ந் தோங்கு முயர் மெய்ஞ்ஞான
மன்னுமத் வைதநீருய்
மாசுடைய வாணவ விருட்பிழம் பறவே
வளர்க்கு மொரு மாபூதியாய்
மாதங்குறக் கொண்டமாலுருச் சடகோபன்
மாண்புறு முறைப்பனு வலில்
மாதங்க மாநீறு செவ்வே யிடக்காணின்
மாலடிய ரென்றேடுமென்
மாதங்க மென்றேது மாத்துல்ய நீறுதனை
மாண்புடன் போற்றி நிற்பாம்
மன்னும் வடலூர ருட்பிரகாசவள்ளலென்
மைந்தனைக்காக்க வென்றே. (௬)

## உருத்திராட்சம்.

அணிகொளர னமரர்கள் செயுந் தவங்கண்டுருகு
மாநந்த நீர்க்கண் மணியாம்
அரிய சைவத்தாழ் வடக்கலனன்கறுபந்த
மானவிரு வினையறுக்கும்
மணியெனது மலவிரு ளறுக்கு முயர்பூதிதனை
மாறு தணிந்துயர்ந்த
மாதங்க மேனியரன் மேனி கொளுமாமணி
மறைப் பொருடனக்கு மெட்டாத்
திணிகொண்ட மாமணி திகைப்பறுத்தருள் செய்மணி
தெய்வந்தனைப் போற்றுவாம்
தெளிவுடைய திருவருட்பா முறைதிரட்டிலே
திண்ணிய வருட்கவியது
பணிவுடைய மெய்விளக்கே விளக்கென்பதது
பார்க்கில் தண்ணீர் விளக்காய்

பாங்காக வேற்கு மருளாட்சி பெற்றிடு மதனைப்
பாடு மகனைக் காக்கவே. (எ)

**பஞ்சாக்கரம்.**

திருவெழுத் தைந்திலுயிர் த்ரோதை மாசருள் சிவந்
தேர்ந்த வுயிர் மாமல மொரீஇ
திவ்ய வகரத் தருளிலுற்றது சிவ்விறையினிற்
சேர்ந்துறச் சிவ்வொன்றிலே
மருவு முப்பொருள் சச்சிதாநந்த முறுசூக்ம
மந்திரந் தனை யேற்றுநும்
மன்னுருச் சிறுதிரு கண்ணிருபுறஞ் சாய்வுறீஇ
வாடாத வாட்ட முறுமோர்
குருமேனி செம்மைகொண் டிருசெவி பரந்து கால்
கோப்புண்ட பாதரட்சை
கூடுத லகன்றுநன் குறுவளாகச் சித்தி
குறுகி கற்பூர தீபம்
பெருசிவ வெளிக்கேற்றிப் பேரின்பக் கூத்தாடிப்
பிரியாதிருந்த வுருவாம்
பேசரிய திருவருட் பிரகாசவள்ளலைப்
பெருமையொடு காக்க வென்றே. (அ)

**சமயதரவர்.**

ஆறுமுகமே சாந்த முகமெனுந் தெய்வமா
மருண் ஞானசம்பந்த நல்
வருண்மொழி மறக்கொணு நாவினுக்கரசுமா
னரிய வருள் பெற்றோங்கியே
தேறு மருளாலால சுந்தரன் மாணிக்க
தேசிக னருட்பதங்கள்

தினமு மறவாதிருந் தேத்திக் கனிந்துருகித்
தேடிப்பணிந்து நிற்பாம்
பேறுதரு வேதாந்த சித்தாந்தமாகிப்
பெரும்பொருட்பீ டகலுறுப்
பேசாத மோனவெளி ஞானவெளி தன்னையே
பேசாதிருந்து பேசும்
வீறுபெறு சன்மார்க்கமே யரியசன்மார்க்க
மென்றே விளம்புமரிய
வீட்டுநெறி காட்டுறு மிராமலிங்கப்பிள்ளை
வித்தகனைக் காக்கவென்றே. (௯)

**சந்தானகுரவர்.**

கயிலைமலை தன்னிலுயர் நந்திமுத லல்வரைக்
காண்பதங்ஙனமரியநற்
கருணைமொழி மெய்கண்ட தேவர்முத லல்வரைக்
காண்பதிங்ஙனமேயெனப்
பயிலுறைசெய் சந்தான குரவர்தம் பாதமலர்
பண்பொடு பரிந்தேத்துவாம்
பண்பகலு முதவருண் மோனவெளி தன்னிற்
பரஞ்சொளி பரப்புகிரண
வெயிலொளியினைச்சொன்ன பொக்கிஷமெனுஞ்சபை
விளங்கும்வடலூரடுத்த
மேல்சித்தி யாம்வளா கத்தமரு மாமணியை
வேதாந்தமுதலாறுமே
துயிலறுத் திடுமரிய பீடமென வதன்மேற்
றுணிந்துறுமிராமலிங்க
துரியவெளி யநுபவச் சோதியுரு வாங்குழவி
துயனைக்காக்கவென்றே. (௧௦)

# செங்கீரைப்பருவம்.

வானோங்கு மருண்மணமணக்கு மலர்வளர் ஞான
வாச மருணீரின் மூழ்கி
மாற்றுயர்ந்திடு மருட்பட்டாடை கொண்டருண்
மாமேனி மேலுடுத்தித்
தானோங்கு மாணவ விருட்பந்தமற வருட்
டண்ணருள் விளக்கி யெழுமோர்
தண்ணொளி விரிக்குமருண் முத்தணி தரித்தினிய
சாந்தபதவியோம நிலையாய்த்
தானோங்கு மெய்ஞ்ஞான வஞ்சன சலாகையாற்
றூனென்னு மாத்ம விழியின்
றன்மலத் திமிரந்தெறச் செய்துவத்வைத
தண்பூதிதனை யணிந்தே
தேனொழுகு பொழில்சூழும் வடலூரமர்ந்த நீ
செங்கீரை யாடியருளே
செம்மைநல முறவளர்ந்தோங்கும் வடலூரநீ
செங்கீரை யாடியருளே. (க)

தெள்ளறல் கொழித்திடு திருப்பாற் றடங்கடற்
றேடி வடவாலுறங்குந்
தேனளிமுரன்று மொய்த்தூறுந் திருத்துழாய்ச்
செந்தொடைத் திருமார்புடைப்
புள்ளிறையொ டகலாத புருகூதனயனுறும்
புவனங்கண் மூன்று முத்திப்
பொருடருஞ் சாமிவளர் புண்ய வடலூரெனப்
போற்றுமுயர் சித்திபுரமாய்.

கொள்ளு முத்தராஞான முயர் சிதம்பரமதிற்
குருஞான வள்ளலாகிக்
குறைகடற் புவிராஜ தவராஜ கவிராஜர்
கூடியடி போற்றுமரிய
தெள்ளியர்க ளுள்ள மகலாப் பெருந்தேவனீ
செங்கீரை யாடியருளே
செம்மை நலமுற வளர்ந்தோங்கும் வடலூரநீ
செங்கீரை யாடியருளே. (௨)

உன்னுதற் கரியவொளி வீசும் பெருங்கருணை
யுருவருட் பணிதரித்தே
ஒல்லென வசைந்தசைந் துண்ணகைத தும்பிவிளை
வோடுந் தவழ்ந்து சென்று
நன்னல முறப்பெற்ற வென்னம்மை சின்னம்மை
நற்றாய் மடித்தலத்தே
நன்னயத்தொடு மிருந்தோங்கு மருளுயக
நயக்குமுனதின் சொலது கேட்
டின்புறுந் தந்தைமடி மீதிருந்தோங்கி விளை
யாடுமருளெந்தை யன்பால்
இன்புட னழைப்பவர்க் கின்புதவு மென்கணே
யெங்கள் குரு ராமலிங்க
தென்தமிழ் மணக்கும் வடலூரருட் பிரகாச
செங்கீரை யாடியருளே
செம்மை நலமுற வளர்ந்தோங்கும் வடலூரநீ
செங்கீரை யாடியருளே. (௩)

நெட்டுட னிணைச்சுவர் தனக்கிசைய வென்புதனை
நீள் சுவர்க்காலென நிறீஇ

நீண்டபெரு முதுகிடை நிமிர்ந்தபழ வென்புதனை
 நேருறு பெருந் தூணெனப்
பட்டுறவமைத்து நடுவோங்கு முகடெனுமேற்
 பரப்பைத் தசைக்கொ டதனுற்
பாங்கு பெறமூடி யிருளாங் கறவிளக்கு மதி
 பகலிரவி மண்டலத்தை
இட்டு மற்றுள தத்துவப்பெரு நன்மேடைக
 ளெடுத் தடுக்கிப் பெரியதோர்
இவ்வுடல்க ளென்னுமொரு சிறுவீடமைத்தவையு
 ளின்புயிர்த் திரள் கடமையே
திட்டமொடுறச்செய்து விளையாடருட் குழவி
 செங்கீரை யாடியருளே
செம்மை நலமுற வளர்ந்தோங்கும் வடலூரநீ
 செங்கீரை யாடியருளே (ரு)

கொந்தார்மலர்க் குழலளிக்குழாஞ் சூழ்ந்துறு
 கொழுந்தே னயின்று நிற்க
கொங்கையுறு பாரமது கொண்டிடை யிளைக்குநங்
 கோமாட்டி யென்றறிந்தே
வந்தொரு மருங்கணைந் தொருகைதனையோச்சியே
 வாண கையொடுங் களித்தே
வருமூட றனையற வொழித்தநங் கடவுளை
 வளைக்கரங் கொண்டு தழுவும்
எந்தாயருட்குரிய பார்வதிபுரப் பெய
 ரியைந்த வடலூரில் வாழும்
இனிமை யகலாத முக்கனி யிரதமாகியு
 ளினிக்குமரு ளொழுகும் நல்ல

செந்தேன் மணக்கு முயர் திருவருட்பிரகாச
　　செங்கீரை யாடியருளே
செம்மைநல முறவளர்ந் தோங்கும் வடலூரநீ
　　செங்கீரை யாடியருளே.　(ரு)

வேறு.

நகமுறு மமணர்முகங் கவிழுறமத
　　நாளும் நலிந்தாட
நாயகமா மருண்ஞானம் விளங்கி
　　நயந்து நயந்தாட
தகதகவெனு மருளொளி முழுதோங்கி
　　தழைந்து தழைந்தாட
தயையுடை நின்னரு ளழகொளி வேத
　　சதங்கை யசைந்தாட
சகமகிழ் சத்திய ஞானமுறும்பொரு
　　டண்ணருள் சாயாதே
சாந்தமிகப் பொலிவார்ந்து வளர்ந்தெழு
　　சத்தியஞான முறீஇ
அகமதி னின்றுவளர்ந்துடனுடிட
　　வாடுகசெங்கீரை
அழகொளி நின்றருள் பழகுறு குழவி நீ
　　யாடுக செங்கீரை　(சா)

அணிகிளரகில நல்லுயிர்கள் பெறுஞ்சிற்
　　றவல மசைந்துறவே
அவ்விய மாயுறு பூதமசைந்துற
　　வாடைம்புல னசைய
பிணியுறு வாதம் பித்தஞ் சீதம்
　　பேர்ந்து புரண்டாட

பின்கலை யிடைகலை யென்னு மிரண்டும்
போர்ந்து துவண்டாட
தணிவில் சடப்பொரு ளெழுவகை தாது
தளர்ந்து தளர்ந்தாட
தடையுறு கரணமுழுந் துதியங்கி
தசைந்து தசைந்தாட
அணிவளர் வடலூ ரருட்பிரகாச நீ
யாடுக செங்கீரை
அழகொளி நின்றருள் பழகுறு குழவி நீ
யாடுக செங்கீரை. (எ)

பண்டரு நற்புருடந்தனின் மூலப்
பகுதி நலிந்தாட
பண்புறுபர சொற்பனமதில் மாயை
பதைத்து பதைத்தாட
விண்ணுறுவி யோமமதிற் பெருமாயை
விலங்கி யசைந்தாட
விதியுறு சிவ சாக்கிர மதில் விந்து
வெளிப்பட நின்றாட
கண்மணி நிகர்சிவ சொற்பன மதிலே
காண்புறு நாதமதே
காண்பற நின்று கலங்கி தளர்ந்து
கசிந்து கசிந்தாட
அண்ணலுறுஞ் சிவசித்தி புரத்தினி
லாடுகசெங்கீரை
அழகொளி நின்றருள் பழகுறு குழவி நீ
யாடுக செங்கீரை (அ)

செம்மை கொளுபசாந்தம் மதின்மாமயல்
சேர்வை சிதைந்தாட
சீர்மை பெறுங்குரு சாக்கிரமதிலிருள்
சிந்தி நசிந்தாட
நப்புறு சீவவுபாதி நலிந்து
மெலிந்து நலிந்தாட
நாயகமாம் பரமான வுபாதி
நடுங்கி நலிந்தாட
விம்மித மற்றவிடந்தனி லோங்கி
விளங்குறு பிரமமதாய்
மேவி னமென்பது போயறநின்று
விளங்கல் விரிந்தாட
அம்புய மலர்வயல் வடவூரப்பனீ
யாடுக செங்கீரை
அழகொளி நின்றருள் பழகுறு குழவி நீ
யாடுக செங்கீரை (அ)

நன்றருளாந் தனைநாடுதலற்று
நயந்ததின் மீதேறி
நங்குரு சுருதியின் முடியிலிருந்ததி
ஞயக மாஞ்சிவமாய்
நின்றருள் பேதமகன் றகலநுபவ
நேர்மையுறப் பெற்றே
நின்மல சொருப சுபாவ மகன்றருள்
நித்திய சத்தியமாய்
அன்றங் கருளுறு மத்தனீ முத்தனீ
யருளாய் நின்றவனீ

ஆண்டவ ஸீயருள் தாண்டவனீயெனை
யாள் பவனீ வடபால்
அன்பகலா தருள் சித்திபுரத்தனீ
யாடுக செங்கீரை
அழகுற நின்றருள் பழகுறு குழவிநீ
யாடுக செங்கீரை (கo)

# தாலப்பருவம்.

சத்தாம் பொருளிற் சக ஜீவ
பரங்கடோன்றும் பேதமது
சத்தாம் பொருடானன்றி வே
றில வென்றோதுஞ் சதசந்தே
சித்தாய் விளங்குஞ் சிவஞானந்
தெளிந்த வறிஞருளத் தூறித்
தித்தித் தொழுகு மருளமுதே
தெவிட்டாவமுதொத் தோங்குமொரு
கொத்தார் மலர்சூழ் குழற்சத்தி
குமரியருட்சீர் மெய்ஞ்ஞானக்
கொழுந்தாய் விளங்கு மரியகுலக்
கொழுந்தே யென்னுட் குறைதவிர்க்கும்
அத்தா வறிஞர் மகிழவரு
மப்பா தாலோ தாலேலோ
அருண் மெய்ஞ்ஞான சித்திபுரத்
தரசேதாலோ தாலேலோ. (க)

சோதி மரஞ்சேர் சிலமந்தி
சோர்வங்கடையா தெழுந்து மரச்
சோதிப் பிழம்பா னேக்குறவின்
டோன்றுங்கடக ராசிதனை
நீதிசிலஞ்சே ரலவனென
நினைத்தங்கஞ்சி நிலையின்றி
நீண்ட தெங்கி னேருறவீழ்ந்
திருந்து கிமிர்ந்தங்குறு மதுவை
பாதியறவுண் டுறமயங்கிப்
பாளையுட னக்குலை பறித்துப்
பார்த்தங் கிறங்கும் பழஞ்சோலை
பழம்பூமணக்கும் பண்பகலா
ஆதியாகும் வடலூருக்
கரசே தாலோ தாலேலோ
அருண் மெய்ஞ்ஞான சித்திபுரத்
தரசே தாலோ தாலேலோ, (உ)

## வேறு.

காரணு கும்பொழின் மாங்கனி நைந்து
கசிந் தொழுகுறு மணமே
கால்கொடு வீசிக் கடிகி நடந்தொரு
கடிதட நின்றதிலே
நீரண வுஞ்சிறு மேன் மணம் நீக்கி
நிமிர்ந்தே விளையாடும்
நேரிழையணி யிருகொங்கை கோண்மகளிர்
நெகிழ்ந்த விடைக்குளுறுஞ்
சீரணிவளர் சிறுகுழிகள் மணக்கச்
செய்துறுபொழி னீங்காச்

செம்மைமிகுங் குயில்பாடக் கேட்டுட
னுடுஞ்செழுமயில் வாழ்
தாரணிபுகழ் வடலூருக்கரசே
தாலோ தாலேலோ
தங்கு மருட்பிரகாசத் தலைவனே
தாலோ தாலேலோ. (ரு)

பொற்புறா சுருதி யகப்பொருள் சத்துப்
பொன்றுத லின்றியுறும்
போக்கறு சித்தினை விட்டகலா துயர்
பொருளானந்த மதே
நற்பொரு ளென்றுனு மன்பர் நயந்து
நயந்தே நாளுமரு
நழுவுறு தண்ணீராய்ப்போனி னைவது
நயமல வென்றிங்கே
அற்புதமொடு வொழுகுறு தயிலம்போ
லன்புற வகமதனில்
ஆங்கே நின்று நினைந்து நினைந்திட
வழிவி லரும்பொருளாந்
தற்பரமாய சமாதியெனப் புகல்
தகைமெ தாலேலோ
தங்கு மருட்பிரகாசத் தலைவனே
தாலோ தாலேலோ. (௬)

எண்டிசையோரு மெழுந்து துதிக்க
வெழுந்தருளும் மரசே
இன்புடனுற்ற விருங்கழ றன்னை
யிறைஞ்சுந்தவ முடையோர்

உண்டருளமுத வொழுக்கினையகலா
துறுசிவ வநுபவமாம்
உள்ளழகோடு நின்றோங்கி வளர்ந்தரு
ளொழுகு மருட் பொலிவை
கண்டவர் தங்க ளகங்கனிவுற வருள்
கண்ணுண் மணியே நற்
காட்சியுடைப் பேராட்சியுறும் பொருள்
கதிபெற வந்தோடித்
தண்டமெனப்பணிவார்க் கருளரசே
தாலோ தாலேலோ
தங்கு மருட்பிரகாசத் தலைவனீ
தாலோ தாலேலோ. (ரு)

கயிலைப்பதி யிறையா மரனிரு
கண்ணுட் கருமணியே
கைதொழுமடியர் பவப்பிணியுற வருள்
கற்பக நற்பரமே
பயிலுறு மினிய பரம்பொரு ளென்று
பதம்பணியும் பண்பிற்
பத்தர்களுக்கருள் போகமனைத்தும்
பாங்குட னருள் சிவமே
இயலிசை கொண்டு துதிப்பரிதா மெழில்
கொண்ட விறைப்பொருளே
என்புகரைந்து கரைந்து தவஞ்செயு
மின்புடை யாளர்களுந்
தயவிற்பொலிவுறு வடலூர்க்கரசே
தாலோ தாலேலோ

2

தங்குமருட்பிரகாசத் தலைவனே
தாலோ தாலேலோ. (௬)

**வேறு.**

தற்பரவெளி யருளற்புதமுடையாய்
தாலோ தாலேலோ
தானெனுமுண்மை தயங்கொளியுடையாய்
தாலோ தாலேலோ
அற்பகலாதவருட் கதிதந்தரு
ளய்யா தாலேலோ
ஆனவகண்டவருட் பரிபூரண
வப்பா தாலேலோ
பொற்புற வளரருள் பூரண காரண
புனிதா தாலேலோ
பூத்தவருட்சிவ பூரணவின்பப்
பொருளே தாலேலோ
சற்குருவேயருள் சிற்பரநாதா
தாலோ தாலேலோ
சத்தியவடலூர் சித்திபுரத்துறை
சதுரா தாலேலோ. (எ)

அஞ்ஞானப் பெருமதகரி தனையடு
மரசே தாலேலோ
அருளமுதம் பொழியானந்தப் பொரு
ளரசே தாலேலோ
மெய்ஞ்ஞானப் பொருள்வேண்டு பவர்க்கருள்
விமலா தாலேலோ
மெய்யரு ளின்பம்முப் பொருளொன்றெனு
மெய்யாய் தாலேலோ

எஞ்ஞான் றன்பர்த மிதயந்தனிலுறு
மெந்தாய் தாலேலோ
என்னுளிருக்கு மலப்பிணி தீர்த்தரு
ளிறைவா தாலேலோ
தஞ்சமுறுந் திருவடலூர் தனில்வாழ்
தனியே தாலேலோ
சத்தியவடலூர் சித்திபுரத்துறை
சதுரா தாலேலோ. (அ)

துன்னிய கரணத் துகளற வென்னுட்
டுன்னுவை தாலேலோ
தூய்மை யரும்பொருள் வாய்மை தருங்கதி
தூயா தாலேலோ
மன்னிய சைவச் சற்குரு வாகிய
மணியே தாலேலோ
மாதவ மோதுறு வாத மகற்றிய
வாழ்வே தாலேலோ
தன்னிலை யேயரு ணன்னிலை யென்றரு
டவமே தாலேலோ
தயவுடை நாயக மான தயாபர
தற்பர தாலேலோ
தன்மய மாகி தயங்கு மொளிக்கு
டயங்குவை தாலேலோ
சத்திய வடலூர் சித்தி புரத்துறை
சதுரா தாலேலோ. (கூ)

துன்மார்க் கப்புலை கொலையற் றவர்தந்
துணைவா தாலேலோ

துன்பக லருளுரு வாகிய வின்பத்
துறையே தாலேலோ
பன்மார்க் கப்பரி சற்றவ நீதப்
பரமா தாலேலோ
பண்புறு கண்புக லந்த வருட்கதி
பரமே தாலேலோ
நன்மார்க் கம்பெறு வார்க்கு ளிருந்தரு
ணட்பே தாலேலோ
நாடுதல் வாடுத லற்ற விடத்தருள்
நலமே தாலேலோ
தன்மை யிடப்பொரு ளற்ற விடத்தொளிர்
தனியே தாலேலோ
சத்திய வடலூர் சித்தி புரத்துறை
சதுரா தாலேலோ (௧0)

## சப்பாணிப்பருவம்.

உண்ணயந் தொழுகுமிரு கண்களூற் றெங்கணு
மொளிப்பிழம் பாலி ருளொழித்
தோங்குறு மருட்டா யுனைப்போன் றுறுந்தெய்வ
முண்டெனவு ளைக்கொ ளுமை
கண்டுமும் மலமங்கு டைச்சீவர் தாமுளக்
காட்சிபெற வேக்க முற்றே
காதலொழி யாதிரு கழற்றுணி தந்தொழல்
கடைப்பிடித் தொழுகு மவர்தம்

பண்டைவினை முழுதும் பறந்திடச் செய்வைசிவ்
பரமவநு பவநிலையெனும்
பண்புதனை வாயாற் புகழ்ந்தினி தறிந்துனைப்
பாடுவோர்க் குதவு நல்ல
தண்மல ரிதழ்த்தா மரைப்பொருவி னைக்கைகொடு
சப்பாணி கொட்டியருளே
சந்தமறை புகழும்வட லூரருட் பிரகாச
சப்பாணி கொட்டியருளே. (க)

பங்கயா சனனுமரி யாயிரங் கண்ணன்
பரந்திடுப ஞமு டிச்செம்
பாந்தளுரு வங்கொண் டிரும்புவி பரிக்குமொரு
பண்ணவன் வியாக்ர பாத
புங்கவன் தும்புருவ நாரதா தியருமே
புகழ்நந்தி யொடுபி ருங்கி
பொருவில்விண் ணவருமெண் ணுறுப்ரம தகணமொடும்
புவனநா தாக்க ளுடனே
தங்கடங் கட்குரிய விருதுபே ரிகைவீணை
தண்ணுமைபெ ருங்குடமுழாச்
சச்சரியு டன்சங்க மார்த்திடச் சிவகணத்
தலைவர்தொழ நடனஞ்செயுஞ்
சங்கர னருட்படிவ மாகிவளர் சற்குரு நீ
சப்பாணி கொட்டி யருளே
சந்தமறை புகழும்வட லூரருட் பிரகாச
சப்பாணி கொட்டியருளே. (உ)

சித்தனெல் லாம்வல்ல தீரனரு ளாற்சங்கஞ்
சேர்ந்துறும் புலவர்சூழச்

செற்றமிற் காய்சினம் வழுதிமுத லீறெனச்
செப்புங்க டுங்கோன்மகன்
வித்தெனவி ளங்கும்வெண் டேர்ச்செழியன் முதலீறு
வேய்முடத் திருமா றனும்
வேண்டுமம் மன்னன்முத லீறென விளம்புமொரு
வீரமுறு முக்ர வழுதி
சத்யமுறு வங்க்யசே கரனென்னு முச்சங்க
சார்புடைய பாண்டி வெள்ளந்
தான்வழுத் துறுலிங்கஞ் சொக்கலிங் கப்பெருஞ்
சாமியருள் வடிவானவா
சத்திய மகன்றுறுச் சித்தாந்த முத்தனே
சப்பாணி கொட்டியருளே
சந்தமறை புகழும்வட லூரருட் பிரகாச
சப்பாணி கொட்டியருளே. (௫)

பஞ்சஞ்சு மெல்லடி பரந்தவிழி யருணீர்
பரிந்தொழுகு முக்க ணுடையெம்
பார்ப்பதிம ணாளன்பரஞ் சோதியென் னுட்
பதிந் தொளிர்பரா பரன்மறைக்
கொஞ்சுறு சதங்கையணி குஞ்சித பதாம்புயக்
குரிசிலென் னெஞ்சது விடாக்
குருநாத நடராஜ மணிவேத வொலிநாத
குணதத்வ வொலிபோ லெழும்
எஞ்சலில் லாதார மாறிலே யாதார
மூர்த்திகளை யேத்திநாளும்
இன்புறாஉம் யோகியர்க ளுள்ளே யெழுந்தோங்கி
யெங்குநிறைகின்றபொருளே

சஞ்சல மகற்றியருள் திருவருட் பிரகாச
சப்பாணி கொட்டியருளே
சந்தமறை புகழும்வட லூரருட் பிரகாச
சப்பாணி கொட்டியருளே. (௪)

சீர்கொண்ட பூதபௌதிக வண்டபிண் டாண்ட
செம்மைவளர் பகிரண்டமாஞ்
செகமெலா மீன்ற வொருபகுதிக்கு மேலான
தெய்வநடராஜமணிதன்
பேர்கொண்ட பதிகமருளிச்செய்து திருவருட்
பிரகாசமாகி யென்னுட்
பிணிமல மகற்றி யருளாநந்த வெளிதனிற்
பேராதிருத்துமரசே
சூர்கொண்ட சற்குருவருட் பொலிவுறுந் தலைவ
துரியந்தனக்கு மேலாஞ்
சுத்தமெய்க் கதியருளி ராமலிங்காய நம
தூய்மையறு மூலபந்தச்
சார்போத மகலச் செய்தருள் சத்யமூர்த்திநீ
சப்பாணி கொட்டியருளே
சந்தமறை புகழும் வடலூ ரருட்பிரகாச
சப்பாணி கொட்டியருளே. (௫)

**வேறு.**

கண்டவர் விண்டவ ரென்றிடு ஞானிகள்
காணுங் கதியகலாக்
காரண பூரண நாரண நாரணன்
காணக்காட்சி யருட்
பண்ணமை கண்ணியருட்பா வொன்றும்
பார்த்ததி லோங்குகதிப்

பண்புறுஞான வருட்பயன் றுய்க்கப்
பரிவுறு மறிஞர்க்கே
தண்ணளிபுரியு மருட்பிரகாசத்
தலைவநீ தாங்குமருட்
டந்தை தயாபர வுத்தரஞானச்
சபைதனி லோங்குமுருக்
கொண்ட வருட் சிவஞானச் செல்வநீ
கொட்டுக சப்பாணி
கொஞ்சுறு ரஞ்சித ஞானசிகாமணி
கொட்டுக சப்பாணி. (சு)

கல்லாதவ ரநுபவியாக் கதிதனை
காட்டுங் கருணையுருக்
கண்மணி விண்மணி தெய்வசிகாமணி
காண்புறு காட்சிதரும்
பொல்லா மணியுயர் கொல்லா மணியென்
புன்மை தவிர்த்தருளும்
பொன்மணி நன்மணி யென்மணி யென்றும்
பொய்மை யொழித்தருளும்
சொற்பொரு ளாயதினுட் பொருளாமணி
சொற்பிழை தனையறவே
சொல்லித்துதி செய்பவர்க் கருணுயக
சோதியுள் சோதியனீ
கொல்லா விரதியர் போற்றுங் குருமணி
கொட்டுக சப்பாணி
கொஞ்சுறு ரஞ்சித ஞான சிகாமணி
கொட்டுக சப்பாணி. (எ)

மணமகலா வருள் கற்பக நற்கனி
மாண்புட னருள் ஞானம்
மன்னுறு நன்மை மருத வருட்கதி
வாய்க்க வழங்குறு நீ
பணவர வல்குற் பாவையர் மயலொழி
பண்புடை யவர்தொழு நற்
பரமவருட் குருவாகி யென்னுள்ளம்
பார்த்தருள் யோகியருட்
கணகண வெனு நன்னூத வொலிக்குங்
காண்பரி தாயவருட்
கண்மணி யுத்தர ஞானச் சித்தி
புரத்தே காண்புறு சற்
குணரகிதப் பொருளருண் மணம்வீசிநீ
கொட்டுக சப்பாணி
கொஞ்சுறு ரஞ்சித ஞான சிகாமணி
கொட்டுக சப்பாணி. (அ)

அருண் மணம் வீசுறு மொருதனி மலரே
யற்புதவா நந்தம்
அகலாதுறு நல்ல நிதநிலைக்கே
அன்புகொ ளநுபவநற்
பொருணிலை தத்வ மசிப்பொரு ளுறுபொருள்
போக்கறு பூரணமாம்
பொய்மையிலாப் பொருள் புண்ணியர் நண்ணுறு
போதம் விளக்குறுநற்
கருணைக் கற்பக நற்பொரு ளதனைக்
கண்ணுண் மணியாகிக்

கருணையோ டுரைசெய வல்லாயென்னுட்
கரவா தொளிருமருட்
குருநிலை யொருநிலை யென்றருள் ஞானி நீ
கொட்டுக சப்பாணி
கொஞ்சுறு ரஞ்சித ஞானசிகாமணி
கொட்டுக சப்பாணி. (கூ)

சூரகலு றவருள் சுப்பிரமப் பொருள்
சுகசொரு பாநந்தச்
சுத்தவெளிப் பொருடன்னை மறைக்குந்
துற்குண மாமண்டம்
பேரகலாக் கலைவித்தை யெனும்பெரு
வண்டம் பேசவொணுப்
பிணிவளர் காலமிராகம் புருடன்
பேசுறு பலவண்டம்
நேரகலாச் சிவதத்துவ வண்டம்
நேருறு பலவண்டம்
நிற்கு நிலைக்குள் வெளிப்படலாகா
நீடொளி தனையறியக்
கூரகல றிவைவிளக்குங் குருபர
கொட்டுக சப்பாணி
கொஞ்சுறு ரஞ்சித ஞானசிகாமணி
கொட்டுக சப்பாணி. (க0)

# முத்தப்பருவம்.

கால நியதி கலை கடந்த
கருணையுரு வாஞ்சிவபோகக்
காட்சி முடிவிற் கனிந்தவருட்
கனியின் விளைவித்தாகி யென்றன்
துலவடிவைக் கனைத்துருக்குந்
துரியவெளிக்கப் பாலாகும்
துரியாதீதப் பொருண் மோனந்
துளும்பு மிராமலிங்கனெனும்
மூலகுரு நீயுண் மகிழ்ந்து
முத்தந்தருக வெனுமுன்னே
மூலப்பகுதி யற்றிடத்தே
முளைத்த முத்தந்தந்தருள்செய்
மூலப் பொருளே வடலூர் வாழ்
முதல்வா முத்தந்தருகவே
முதலீ றில்லாவிடத் தொளிரும்
முதல்வா முத்தந்தருகவே. (க)

கமல யோனி செயுஞ் சிருட்டி
கழன்றவிடத்தங் கொளிருமருட்
கருணை முத்தாய் விளைந்தவருட்
கடலே யென்னுட் கலந்தோங்கும்
நிமல தோற்றங் கடந்தப்பா
னீண்ட பிரம வநுபவத்தி

னிமிர்ந் தாங்கொளி செய்நி சாநந்த
நித்யமாகி யென்னுள்ளே
அமரு முத்தே யென்னருமை
யாணிமுத்தே வாநந்த
வருட் சீராகி விளையமுத
மாகித் தனித்தவருண் முத்தே
மும்மல மறுக்கும் வடலூர் வாழ்
முதல்வா முத்தந்தருகவே
முதலீ றில்லாவிடத் தொளிரும்
முதல்வா முத்தந்தருகவே. (உ)

முத்தாய் விளைந்த வருண்மோன
முத்துள் முளைத்த முத்தினுக்கு
முத்தா மிராமலிங்க மெனு
முத்தே முதலீ றில்லாத
முத்தி தானுயுயர் முத்து
முளைத்த சிவசாக்கிர சுழுத்தி
முதலாய் நின்று நிகழ் பிரம
முனையினீங்கா தொளிர்முத்து
சத்தாம் பிரம சாக்கிரத்தே
சார்ந்தங் கொளிருஞ் சாந்தபத
சத்யா நந்தவருண் முத்தே
சாகாவிடத்து சாயாத
முத்தே தருமோர் சித்திபுர
முத்தே முத்தந்தருகவே
முதலீ றில்லாவிடத் தொளிரும்
முதல்வா முத்தந்தருகவே. (ரு)

சொக்கப் பெருமான் வெள்ளி மன்றுட்
சோதிப் பெருமான் றன்னருளாற்
றோன்றி விளங்கு நின்வடிவந்
தோன்றாத் துணையாஞ் சோதியனற்
பக்க வழியாற் பரந்தோங்கும்
பார்வைக் கனலாற் பாகமுறப்
பண்டை மூலப்பகுதி முளை
முளையைப் பழுக்கப் பார்த்தங்கே
ஒக்க மிளிரும் பிரம வொளி
தானே யதுவா யொளி விடச்செய்
துன்னற் கரிய குரு முனையி
லொளிவிட் டோங்கு மொரு முத்தே
முக்கண் பெற்றவ ரனருளால்
விளைந்த முத்தந்தருகவே
முதலீ றில்லாவிடத் தொளிரும்
முதல்வா முத்தந்தருகவே. (சு)

சொருபந் தனையு மச்சொருபந்
தன்னையறி நல்லுயிர்தனையும்
சொல்லுமிருபத் தொருநான்கு
கருவிதனையுஞ் சோர்வின்றி
உருவ தரிசனஞ் சுத்தி
யொளிவிட்டோங்க வுறச்செய்து
உன்னற்கரிய பரம் பொருளை
யுன்னியுன்னி யுறங்குமவர்
மருவு மறிவிற்பூத் தொளிரும்
மணியே யன்பர் மறவாத

மன்னும் பிரமவொளி தானாய்
    மலர்ந்த முத்தே மறைப்பொருளே
முருகு மணக்கும் நிலவொளி செய்
    முத்தந்தருக முத்தமே
முதலீறில்லா விடத்தொளிரும்
    முதல்வா முத்தந்தருகவே. (௫)

## வேறு.

சந்தத மென்செயனின் செயலியானறி
    தன்மை நின் தன்மையதாம்
சமரச நிலையாகம வேதாந்தத்
    தத்துவநிலை யெனுமோர்
பந்தமிலா நிலை துவிதாத்வைதப்
    பரநிலை யெனுமடங்த
பண்புறு மருணிலை மெய்ந்நிலை யதுவே
    பரமாநந்த நிலை
இந்நிலைச் சுத்தாத்வித சமரச
    மிந்நிலை மேனிலையே
என்றறியெனு மருளுத்தர ஞான
    விலக்கண முறுவெளியே
முந்தி முதிர்ந்து கனிந்து பழுத்தருள்
    முத்தந் தந்தருளே
முக்கனி சர்க்கரை யொக்க வினித்திடு
    முத்தந் தந்தருளே. (௬)

முச்சக முழுது மகிழ்ந்துனை யேத்த
    முழுக்கருணைக்குளுறும்

மோகமோ டொழியாச் சோக மொழிந்து
முழுப்பொருண் முத்திபெறும்
சொச்சமதான சுகக்கட றன்னை
சுகித்தெழு மறிஞர் குழாஞ்
சொந்தஞ் சொந்த மெனப்புடை நின்று
துதித்தெழ வருளமுதே
பொச்சமில் மோன முழுப்பொருளே யென்
பொய்ப்பிணி யெய்ப்பறவே
புந்தியு ணின்றருள் சிந்தாமணி யென்
பொற்புவி சாந்தமணி
முச்சக ஜீவபரம் பொருளான நீ
முத்தந் தந்தருளே
முக்கனி சர்க்கரை யொக்க வினித்திடு
முத்தந் தந்தருளே. (எ)

தத்துவ நீக்கஞ் சரிதையின் முடிபைத்
தண்ணருளா லறிதல்
சாலோகந் தான் தற்போதந் தான்
தானறவே நீக்கி
சத்திய வருளுருவாகி நீ தங்குதல்
சாமீபம் மெனவே
சாற்றித் தற்போதங் கெடநிற்பது
தண்ணருள் யோகமதிற்
சத்துவ முறுபரை தானாய் நிற்பது
சாரூபம் மெனவே
சற்குரு வருளா லங்ஙு னறிந்தே
தற்பரை நீக்கமதில்

முத்தெனு ஞான மதீதஞ் சாயுச்
சிய முத்தந் தருவாய்
முக்கனி சர்க்கரை யொக்க வினித்திடு
முத்தந் தந்தருளே. (அ)

அண்டர்க டொழுதெழ வருளுருவாகிய
வாதி யநாதியதாய்
அற்புத மாகுமருட் குருவாகியென்
னகமதை விட்டகலா
விண்டுறு மலமா நிகர்த்திடு மடியிணை
வேண்டுறு சித்தாந்தம்
வேதாந்தப் பொரு ளுதாந்தம் வெளி
யோகாந்தப் பொருளே
உண்மை யகன்றுற லாகா வுத்தம
மோங்கிய போதாந்தம்
உருவெளி யருவெளி யுருவரு வெளியா
யோங்கிய வொருபொருளே
முண் டகமலரோன் கண்டுணராப் பொருண்
முத்தந்தந்தருளே
முக்கனி சர்க்கரை யொக்க வினித்திடு
முத்தந் தந்தருளே. (௯)

சொன்னிலை பொருணிலை யறிய வொணுநிலை
சொல்லுங் கதிநிலையைச்
சொல்லு மருட்பா சொல்லச் சொல்லச்
சுகஞ் சுக மென் றுரைசெய்
மன்னுறு மநுபவ நிலையரு ணிலையது
மாறு நிலையதனை

மாண்புட னுணரு மகாநுபவர்க் கருள்
மாதவனை யருள்வாய்
பொன்னம் பலமே யென்னம் பலமென
போற்று பவர்க்கருளும்
புண்ணியனே யுயர் திண்ணியனே புகழ்
போகாப் பொருணிலையே
முன்னிலை வடலூ ருத்தமனே யருள்
முத்தந் தந்தருளே
முக்கனி சர்க்கரை யொக்க வினித்திடு
முத்தந் தந்தருளே. (௪௦)

---

# வருகைப்பருவம்.

ஏழிலைம் பாலைதனை சீறிக் கடங் கவிழ்த்
திறுமாந் துயர்ந்து செல்லும்
இருகை யானைப் பிடியினடை செருக்கற வன்னம்
இளநடை தளர்ந்துறச் செய்
தோழி மடவார் மயலகற்றி யருள் பெஞ்ஞான
சோதிச் சுயம் ப்ரகாசச்
சுத்தமா மயிலாட வம்மயிற் குயிலான
சொருப வநுபவ மதனையே
ஏழி ரண்டுலக முழுதுற் பவலயம் போன
வெங்கை யருணுட்ட முடையோர்க்
கின்புடன் றந்தருளி ராமலிங்கக் குரு
வியற்கை யருளாட்சி நாளும்

வாழி யருளோங்கும் வடலூ ரினுறை வள்ளனீ
 வருக நீவருக நாளும்
வண்மை யருடிரு வருட் பிரகாச வள்ளலே
 வருக வென்மணி வருகவே. (௧)

ஒருபொருட் டத்வமசி யெனுமகா வாக்யமதை
 யுணரில ஃதுள்ள தத்வம்
ஓங்கிவளர் தானதா யுள்ள வாநந்தமா
 யுறு பொருள தீதமாகி
வருபொருட் சச்சிதா நந்தமா யழியாது
 வாழு முப்பா ழொன்றதாய்
வளர்துரிய மூன்று மொன்று யதின்மீதிலுறு
 வாழ்வு தானுகிகின்ற
குருவநுபவா தீத குணரகித விசுவமுதல்
 குறைவிலா நிறைவதாகி
குணமாயை வேறதாய் வேறென்ப தில்லதாய்
 கோதின் முப்பொரு ளொன்றதாய்
மருவியே யொளிர் மூலகாரணப் பொருளான
 மறையினுண் மணிவருகவே
வண்மை யருடிருவருட் பிரகாச வள்ளலே
 வருகவென் மணிவருகவே. (௨)

பதிநித்ய வறிவாம் பசுத்தறிவதே பசு
 பகர்ந்திது வெனச் சுட்டலே
பாசமெனு முப்பொருளு மொன்றே யெனக்கண்டு
 பகர்ஞான வள்ளலுனைநற்
கதியருளு மண்ண லுளத்வைத மாதலே
 காணிரண் டின்மையென்றே

கழறுமொரு சிவஞான போதவெண் பாப்பொருள்
　　கருத்திற் கிசைந்தநல்ல
மதிவழி யுயிர்த்தொகை மதித்திடா வழியுக்தி
　　வழியால் விளங்கு முண்மை
மாட்சிதனைநோக்கி முப்பொருளொன் றெனக்கொண்டு
　　வாழுமறை சித்தாந்த நன்
மதிதனை யெமக்கருள் செயுத்தர சிதம்பர
　　மகாநுபவ நீ வருகவே
வண்மையரு டிருவருட் பிரகாச வள்ளலே
　　வருக வென்மணி வருகவே.　　(ந)

உலகநிலே தானறுஞ் சுருதிதனில் மருணீங்கு
　　மொரு சாதகந் தன்னிலே
உலைவிலிருள் சாத்திய மதிற்போ மதீதநிலை
　　யோங்கிவளர் சகச ஞானங்
நலகமொரு சிறுதுமில்லா தோங்குமநுபவக்
　　கருணையுரு ஞானமகலாக்
கனிவுபெற்றிடு சாந்தமுக காட்சி நாளுமே
　　கரவாது காட்டி யருளும்
நலமுடைய குருவே நின்முகம்வற்றி வளர்காட்சி
　　நாத தத்துவ முழுதுமே
நாடுறு மடக்கமுறு தருண மஃதறியார்க
　　ளுஞ விதங்களாக
வலனற்ற வாதமே பேசுவ ரவர்க்குமருள்
　　மணியே நீ வருசமுத்தி
வண்மையரு டிருவருட் பிரகாசவள்ளலே
　　வருக நீ வருக மணியே.　　(சு)

திருவருட் பிரகாச வள்ளலனீ திருநீ
றணிந்துருத் ராக்க மணியாற்
றிருமந்த்ரம் நாளுஞ் செபித்து விழிநீர் பெருகி
நீந்தமிழெடுத் தோதுநீ
உருவங்க மொத்த சிவஞானி யாயொரு சித்தி
யுயர் வளாகத் தமர்ந்து
உண்மை சிவஞான வனலொளி யாலும் பாசொழித்
தோங்கு பசு மல சாம்பருன்
ஒரு பசு மலத்தினுக் கொருபுறப் பொருளென்
றுரைத்ததனை யணியாது விட்
டோங்கு மத்வைத வெண்ணீ றணிந்துயர் கருணை
யுருவான பின்ன ருருவாப்
வருமக்க மணிதனை யகற்றி யருளப்பனே
வருக நீ வருக ஞான
வண்மையரு டிருவருட் பிரகாச வள்ளலே
வருக கனமணி வருகவே. (௫)

அருளுருக் கொண்ட வொருவடிவு சிவயோகி வடி
வான நின்னரிய முடிமேல்
அங்கே வளர்ந்த சிகை மூன்று பிரிவுள்ளே நின்
னரியதாய் சின்னம் மைதான்
அருள் சிவனடிச் சேர்ந்தபின்ன ரொருசிகை கொண்டு
அரிய வெண்டுகில் மேற்கொளீஇ
அருட் பாதமேற்கு நன்கிரு பாதரட்சை தனை
யங்ஙன மகற்றியாளும்
இருளறு வளாகமது சித்தியெனு மோரிட
மிருந்து கற்பூர தீபம்

ஏற்றி யாராதித்து வானந்த மேவிட்டு
வினிய கூத்தாடி நின்று
வருமுடல் மறைத்து வெளியான வரசே வருக
வருக நல்லரிய சித்தி
வண்மையரு டிருவருட் பிரகாச வள்ளலே
வருக வென்மணி வருகவே. (௬)

வேறு.

சீரார் கருணைக் கற்பக நற்
றெய்வத் தருவே வருகவருட்
செம்மல் வருக மன்பதைக் கோர்
தெய்வப் பொருளே வருகபவத்
தீராப் பிணிக்கட் டவிழ்த்து மய
றீரத்து கதிதந்தருளு மென்றுந்
தெவிட்டா தென்னுட்டித் திக்குந்
தெய்வக் கனியே வருக நல்ல
ஏரார் பிரம வெளிக்குள் வள
ரினிய சச்சிதா நந்த
வின்பக் கடலே வருக வென்னு
ளினிக்கு மெந்தாய் வருக வெழில்
காரார் சோலை புடைவளரக்
காக்கும் வடலூரரசே யெங்
கண்ணே வருக விராமலிங்கக்
கருணை நிதியே வருகவே. (எ)

வேறு.

சிறந்திடும் பொருட்குளுந்
தரச்சிதம் பராவருட்

சித்தி தானியற்ற வல்ல
தெய்வ ஞான வள்ளலே
இறந்து ளோர்கடமை யெழுப்ப
வல்ல வெங்க ளீசனே
எல்லாம் வல்ல ஞான சித்த
விடர்செய்பாவ நாசனே
மறந் தவிர்த்தவன் பருள்
மறந்திடா திருந்தவா
மாதவஞ் செய் பெரியருன்னை
வாழ்த்த வாழும் மன்னவா
வறந்திடாத நீர்வளங் கொள்
வடலூ ரெந்தை வருகவே
வளரருட் ப்ரகாச வள்ளல்
வருக வருக வருகவே. (அ)

நீதி யுடைய தாகு மரிய
நிமலசித்தி செயவலாய்
நீண்டவுலகி லெய்துங் காட்சி
நேர்ந்திடச்செய் நித்தனே
சாதி சமயமாம சத்ய
சதிரழிந் துறச்செயுஞ்
சத்ய நித்ய முத்த சித்த
சாமியிங்கு சார்ந்தருட்
சோதியாகி நின்றருட்கண்
சொந்தமாய் விளக்கியாள்
சுத்த ஞான சித்தனே
சுயம்ப்ரகாச முத்தவிண்

வாதி வாய்கள் மூடவே நீ
வருக வருக வருகவே
வளரருட் ப்ரகாச வெந்தை
வருக வருக வருகவே. (௯)

வேத வாகமச் சமத்த
வித்தகப் பொருட்குணம்
வேண்டு சித்தர் கணமதைப்
பணிந்த வேத வித்தகன்
மாதவஞ் செய் தாயுமான
வள்ளல் ஞான மூர்த்திபால்
மன்னு சமரசானுபூதி
வாழ்வு பெற்று வந்தவா
நாத தத்வ முடி பிறந்த
நல்லருட் ப்ரகாசனே
நாடு நானெனுந் தியக்கம்
நாசமாக்கும் நல்லவா
வாத மற்ற நல் லருட்
கதிக்குளாக்க வருகவே
வளரருட் ப்ரகாச வெந்தை
வருக வருக வருகவே. (௧0)

# அம்புலிப்பருவம்.

திருவளர் திருப்பாற் கடற்குள் ளுதித்தனைச்
செம்மைவளர் திருவருட்பாற்
றீங்கடலுதித்தவ னிவன்பேர் திரைக்கடற்
றீங்கிலி மகிரண வமுதம்
உருவளருடற் குள்ளமைத் தொழுகுமதி நீயுள்
ளொழுகுமநு பூதிமதிகாண்
உயிரவி யொளி கொளீஇ யோங்குமதி நீயிவன்
ஓங்குசிவ வொளியி னொளிகாண்
இருளகல வெழுமொளி கொளினி யமதிநீமூல
விருளொழித் தருளுமதிதான்
இன்பமுதொழுக்குமதிநீ யிவன்மூலவழி
யெழுமமுதகற்றி யென்றும்
அருளமுதொழுக்கு மதிராமலிங்கச் சேயோ
டம்புலீ யாடவாவே
அரியவடலூ ரருட்பிரகாச வள்ளலுட
னம்புலீ யாடவாவே. (4)

மதிமண்டலந்தனி லிருந்துகுறை மதியாகி
வாழ்வா யிவன்றனக்குள்
மதிமண்டலந்தனி லிருந்தொழுகு மமுததனை
வாங்கியீங் தெங்கு நிறைவான்
மதி விண்முழுதெங்கும் மயங்கு மதிநீ யிவனுள்
மாயையை மிதிக்கு மதிகாண்

மன்னிரவி தன்னுட் கலந்தின்மை யாவையிவன்
மாறு வகண்ட மதிகாண்
புதியபூச் சாயா களங்கமுறு வாயிவன்
பொருமாயை தன்களங்கம்
புரையற விடுத்தின்ப பூரணா நந்தமாய்
பொலிவுபெற் றோங்கு மதிகாண்
அதிகமுறு மெய்ஞ்ஞான வாநந்த போதனுட
னம்புலீ யாடவாவே
அரிய வடலூ ரருட் பிரகாச வள்ளலுட
னம்புலீ யாடவாவே. (உ)

விண்ணுலகில் வந்துனைப் பற்றும்விட தாரிபால்
வேதனை விடாது திரிநீ
விதி விலக்கினை யறிந்துறு மறிஞர்விடு காம
வினைநோ யுழன்று கயநோய்
நண்ணுறு முடற்கூ னடுத்துலவு முனைமாதர்
நாடிப் பழிக்கு மதனை
நாடி மனம்நொந் துடலம் வாடிப்புழுங்கியே
நாடி நாடித் திரிந்தே
எண்ணுநீ யருளுறு மிராமலிங்கப் பெயர்கொ
ளெந்தையரு ளமுதமுண்டு
இன்புறுத் துன்பமுறு பசிநோயகன் றுநீ
யெந்நாளு முலவ வருள்செய்
அண்ணலரு ளாநந்த வமுதுடை யென்னப்பனுட
னம்புலீ யாடவாவே
அரியவடலூ ரருட்பிரகாச வள்ளலுட
னம்புலீ யாடவாவே. (௩)

பூதமுறு மாயையை யொறுத்து மேல் கீழான
புவன தத்துவ மடுக்காய்
பூண்ட வரிசை கடமை யெடுத்தெறிந் துலவுமொரு
பொருவில் மெய்ஞ்ஞான வீரன்
பூத பௌதிக வுயிர்க்குள்ளூறு மஞ்ஞானவதை
போகாத மோகவதையும்
போகப்புடைத் தெறிந்தோங்கு முயரருண்ஞான
போர்தம்வளர் வீரனெனவே
வேதனையகன்று மெய்ப்புலவர் பரணித்தமிழ்
விளங்கப் புகழ்ந்து பாட
விண்ணவர்கள் மண்ணவர்க ளேத்தவருள் செய்தே
விளங்குபவ னென்றறிகிலாய்
ஆதித்தனோங்க மறையுங் குழவியாகி வள
ரம்புலீ யாடவாவே
அரியவடலூ ரருட்பிரகாச வள்ளலுட
னம்புலீ யாடவாவே. (ச)

நீண்ட வைம்புலனுலு கரணங்கழன்று மன
நேருறக் கண்டுவாயு
நேருரு துழலுதலகன்று மலவிருளற
நிமிர்ந்து கூடத்தணுகி
காண்டொறுந் துரியவெளி தனையுங் கவர்ந்து மேற்
காணுறு மதீத வெளியுங்
காணாது காணுமம் முத்திநிலை தன்னையே
காட்டுமொரு மூலகுருவாய்
ஈண்ட மார்ந்தருள் சுத்தவீர னொருபாவனை
யெனும் மூலஞான வனலால்

இன்புடன் மதிமண்டலந் தாக்கி யின்பமுத
மேற்பது விலக்கியுள்ளே
ஆண்ட வருளுடைமை யாற்றுண்டவ னழைப்பனுனை
யம்புலீ யாடவாவே
அரியவட லூரருட் பிரகாச வள்ளலுட
னம்புலீ யாடவாவே. (௫)

நீறுபட மலவிரு ளொதுக்கி யருடர வரிய
நிமலகுரு வாகியென்னுள்
நின்றுமுக் குணமவை யொழித்த வைக்காதார
நேர்ந்துறு வியக்த மதனை
கூறுபட் டறவொழித் தங்ஙன மெழுந்தரிய
கூடத்தனைக் குப்தமாய்க்
கொண்டெழுந் துறுமாயை வெந்துறு படம் போற்
குழைந்துற வொழித் தருவமாய்
வேறுபடு தலுமற வொழித்து சுப்பிரமமாய்
வீற்றிருந்திட வருள்செயும்
வித்த கன்றனுனை யொழிப்பதரி தொவினை கொள்
வீங்கு மயல் கொண்ட வுயிர்கள்
ஆறு தத்துவ சடமகற்றி யரு ளப்பனுடன்
அம்புலீ யாடவாவே
அரியவட லூரருட் பிரகாச வள்ளலுடன்
அம்புலீ யாடவாவே. (௬)

தெருளோங்கு தெண்ணில வெறிக்கு முழுமேனி கொடு
தேர்ந்துலவு மொருமகனெனச்
சென்றுறு செருக்குடையையுன் செருக்குடைய வுயர்
செம்மல ருளமுத மகலாப்

பொருளா ருண்மத வெள்ள மொழுகிய பெருங்கருணை
போகாத பொருகளிறெனும்
புண்ணிய விராமலிங்கத் தலைவனுட் சினம்
பொங்கிப் பொழிந்துற வெழீஇப்
பருகிலொரு கவளமாய்ப் பாங்காய் முடிந்திடுவை
பார்த்திலே கொலையனருளாம்
பார்வைக் கொதுங்கி மெல்லெலன வொழுந்து லவிபுறு
பண்பிலாத் திருடனீயென்
றருளமுத முண்டவ னறிந்தானின் ருதலா
லம்புலீ யாடவாவே
அரியவட லூரருட் பிரகாச வள்ளலுட
னம்புலீ யாடவாவே. (எ)

## வேறு.

குழகன கண்ட சிவாநுப வந்தரு
கோதிலருட் குருவாங்
கொற்றவ னற்றவ முற்றிட வோங்குங்
குருவரு ளுருவாகிப்
பழகிகர் சிவகதி யுற்றவ னருளாற்
பார்த்தரு ணீர்பாய்ச்சிப்
பண்புறு மனவய றன்னில ருட்சிவ
பதமுறு வித்திடவே
அழகுற நின்று வளர்ந்து விளைந்தரு
ளமுத வொழுக்கதனை
அங்ஙன நின்று புசித்தரு ளன்பர்க்
கானவருட் சிவமாம்

மழகளி றொத்திடு பவமொ டாடிட
வா வம்புலி வாவே
மழலை யருட் பிரகாச னதருகே
வா வம்புலி வாவே. (அ)

சிந்தனை கைந்து கசிந்திடுவோர்க் கருள்
செய்பவன் றிருவகலாச்
செம்பொருள் சற்குரு வநுபவ மதனிற்
றுவிதாத் வைதநிலை
தந்திடுவது பயமெனன் றருள்பவ னெனை
தானக் குறுபவனந்
தற்பர சிற்பர தக ராகாயந்
தான து வென்பது மோர்
சொந்த மெனப்படு முபதேசப் பொருள்
சொல்லிப் பணிவித்தென
சொல்வழு பொருள்வழு வென்பது முழுதுஞ்
சோர் வடைவுற வாங்கெ
வந்தாட் கொண்டருள்பவ னுடனுடிட
வா வம்புலி வாவே
மழலையருட் பிரகாசன தருகே
வா வம்புலி வாவே. (கூ)

மோனமதாகி முளைத்தெழு முதலாய்
முன்பின் மலை வறவே
முண்டெழு துயரறவாங் கெழுபவ னெம்
முனிவு தொலைத் தருளி
ஊனமதாகுமுடற் சுமையாவு
மொழித்தரு ளோங்குறவே

உண்மல முழுதுமகற்றி யெனக்கரு
ளுத்தமன் முத்தியெனுந்
தா னதுவாமென நானறநின்று
தனித்திட வருள்பவ னெந்
தண்ணருளாம் பரமான தயாபர
சாமியெனத் தலையால்
வானவர் தொழுதெழுபவ னுடனுடிட
வா வம்புலி வாவே
மழலையருட் பிரகாசன தருகே
வா வம்புலி வாவே. (௧௦)

---

# சிற்றில்பருவம்.

கல்லார் தமக்குங் கற்றவர்க்குங்
களிப்பை யருளுங் களிப்பெனுமோர்
கருணைப் பாட்டுங் கற்பூர
மணக்கு முடலிற் கலந்தெனுமோர்
சொல்லார்கவியுஞ் சொலச் சொலவுள்
ளினுக்கு மினிப்புக் கொருகவிநீ
சொல்லி முடித்ததனித் தனிமுக்
கனியும் போதுஞ் சுயகதிக்கு
வல்லார் மதிக்கும் மணவாளா
வடலூர்க் கரசே வழுத்துபவர்
வாழவருள் செய்திடு மழியா
வாழ்வே யெனக்கும் வாழ்வருளும்

செல்வா ஞான சிகாமணியே
சிறியேன் சிற்றில் சிதையேலே
சீரார் வடலூர்க்கரசேநீ
சிறியேன் சிற்றில் சிதையேலே. (க)

கொல்லா விரதங் கொண்டவர்க்குங்
குணமா மேரு வாகியருள்
குழகா வரு ணொக்கதனாலே
குறிக்கும் பொருணற் றுரியபதம்
வல்ல வருட்பா வொன்றுமே
வாழ்த்து மடியருட் புகுந்து
வழங்குங் கதிக்கு மணிபோலும்
வள்ளாலுனது மலரடியென
பொல்லா முடியின் மீதேற்றிப்
பொல்லாச் சிறியேன் புன்மலங்கள்
போகவிடை தந்தருள் செயுமென்
பொல்லா மணியே புலைப்பிறவி
செல்ல வேண்டுமவர்க் கருள்வாய்
சிறியேன் சிற்றில் சிதையேலே
சீரார் வடலூர்க் கரசேநீ
சிறியேன் சிற்றில் சிதையேலே. (உ)

அம்மை யப்பனுகு மெங்க
ளரிய பெருமான் றேன்றிவளர்
அருமை யகலாச் சிவஞான
வருட்பால முதந்தர வுண்டார்
தம்மை யுணர்ந்த வநுபவத்தாற்
றயங்கு மருளானீ யுரைத்த

தாயா மருட்பா நூலதிலே
தானீ யுரைத்த சத்தியவான்
வெம்மையகன் மெய்க்கவி யொன்றை
விளம் பிற்றம்முள் விளக்க முறும்
வேதப் பொருளின் முடிபுணர்ந்து
வேண்டும் பெரியருட் களிப்பர்
செம்மை யவராற் புகழவருஞ்
சிறுவா சிற்றில் சிதையேலே
சீரார் வடலூர்க் கரசே நீ
சிறியேன் சிற்றில் சிதையேலே. (கூ)

வாட்ட மோடு சிறிய னெனும்
வள்ளற் கவிக்குள் வளரருட்டேன்
வழிந்து மடியருளஞ் சுரந்து
வழிந்து திரண்டு வாழ்ந்து பவர்
தேட்ட மொழிக் துதியைப் பொழிந்து
தினமு மாறுவின்ப வெள்ளம்
தேக்கித் திளைத்தங் கொழுகுமருட்
டெய்வப் பொருடா னென்றன் மனக்
கோட்ட மொழிக்குங் குணமளிக்குங்
குறையாப் பேரின் பளிக்குமது
குறித்த குறிப்பின் வழிநின்ற
குணமா மேரு வனையபொருள்
திட்டமறி ஞருளக் தேடுந்
தேவே சிற்றில் சிதையேலே
சீரார் வடலூர்க் கரசே நீ
சிறியேன் சிற்றில் சிதையேலே. (சு)

குறிகள் குணங்கள் கடந்த தனிக்
கூத்தனுரு நல்லெழுத்தாய்க்
குறிப்பதொரு வாசக மதனுட்
கூடும்பொருடான் வாச்சியமென்
றறியவுணர்த்து மநுபவத்தி
னருமையகலா வதீதநிலை
ஆளும் பொருடா னரசாட்சி
யாதலறிந்திங் கெமக்கருணீ
செறிந்த வுயிர் தானிறந்த பினுந்
திரும்பவெழுப் பலருட்சோதித்
தெய்வ வழியா லாகு மெனத்
தெரிக்குமுண்மைத் திருப்பாட்டே
சிறியேன் றனக்குஞ் சாட்சியது
தெரியேன் சிற்றில் சிதையேலே
சீரார் வடலூர்க்கரசே நீ
சிறியேன் சிற்றில் சிதையேலே, (௫)

கரணவண்டம் புலனண்டங்
காணும் பஞ்ச பூதமுதற்
காணுமாத்ம தத்வமறுக்
கால தத்வங் கருவுற்று
மரண மறியா தெழுஞ் சுத்த
வித்தை முதலாய் மருவுமண்டம்
மன்னும் விந்துமுத ளுன்காய்
மருவுமண்டம் வளர்ந்தோங்கி
இரண முதலா யுறு பிண்ட
மேற்றபகி ரண்டங்களுமே

ஏற்ற மூலப் பகுதி கொடு
வியற்று மெந்தாய் மறைநான்கின்
சிரங் கொண்ட மருஞ் செல்வமே
சிறியேன் சிற்றில் சிதையேலே
சீரார் வடலூர்க்கரசே நீ
சிறியேன் சிற்றில் சிதையேலே. (சா)

அகரந்தா னைம்பாற்கு முத
லாகி யுயிரா யமைந்துறுமவ்
வாற்ற லுடைமை போன் றமரும்
அப்பா வரசே யருளுதய
தகர வித்தை யாகு மது
தானுங் கதிதா னுகுமுனை
தானு யுறுவோர் தா மறிவார்
தானல்லாத நானறிந்து
பகரப் படுமோர் பசு ஞானம்
பாசஞானம் பதிஞானம்
பரந்தமூன்றுள் பதிஞானங்
பாங்கா யுணரேனகல முறும்
செகங்கண் டுணரா மணம் புணர்ந்தாய்
சிறியேன் சிற்றில் சிதையேலே
சீரார் வடலூர்க்கரசே நீ
சிறியேன் சிற்றில் சிதையேலே. (எ)

தப்பிலது நீயா மென்று
தனித்து மறைகள் கூறுமருள்
தானுய் விளங்குஞ் சிவனே நீ
யானு யென்னுஞ் சைவமது

ஒப்பில் சைவஞ் சிவத்தோடு
　　முறு சம்பந்த மெனவுரைத்து
ஓங்குஞ் சைவ மத்துவித
　　முயர் வேதாந்தப் பொருட் கூறென்
றிப்பார் தனினின் றியம்பும் வள்ள
　　லினிய சுருதிக் கெதிரிலையென்
றெடுத் தென் போல் வார்க்கியம் புமரு
　　ளெந்தாயின் பவுருவாகும்
செப்புங் கல்வி ஞானமிலாச்
　　சிறியேன் சிற்றில் சிதையேலே
சீரார் வடலூர்க் கரசே நீ
　　சிறியேன் சிற்றில் சிதையேலே. (அ)

உயர்வில் ஜெனனங் கருப்பைதனி
　　லுறைதல் மரணமது நீங்கல்
ஒழியா நரக மாயாச
　　முயர்வாஞ் சொர்க்கம நாயாசம்
மயக்கு மலமே மறைக்குமொரு
　　மாயை விளக்கு மயலகலா
மாளாக் கன்மம் விகாரமது
　　மருளச் செய்பு மாண்பதனு
றபங்கு மான்மா சனனமொடு
　　மரணமடை யுந்தர மகன்று
தானய் விளங்கு மநுபூதி
　　தானென் றுரைக்கு மறைஞானச்
செயங்கொள் வள்ளலுரை மெய்யெனுஞ்
　　செல்வா சிற்றில் சிதையேலே

சீரார் வடலூர்க் கரசே நீ
சிறியேன் சிற்றில் சிதையேலே. (௯)

அருளாம் வெளியின் வடிவாகு
மாதி சிகர வாகந்த
அரிய மவுனந் தனிலாகு
மதுவே யுண்மை யெனவுரைத்து
கருவி யறுக்கு முருத்திரனே
காணுஞ் சாகாத் தலையரிய
கண்ணுண் மணிமாயே சுரனே
கருதற் கரிய வேகாக்கால்
மருவுமரிய சதாசிவமே
மண்ணுட் போகாப்பு னலன்றி
மாண்டவுப் பின்வகை பேத
வழியன்றென நீயுரைத்து மனச்
செருக்கை யகற்றி யருள்வாய் நீ
சிறியேன் சிற்றில் சிதையேலே
சீரார் வடலூர்க் கரசே நீ
சிறியேன் சிற்றில் சிதையேலே. (௧0)

# சிறுபறைப்பருவம்.

அம்மை யருண் முலையமுத முண்ட சம்பந்தர்போ
லய்ய நின்றாயின் முலையுண்
டங்ஙனம் வளர்ந்த நின்னருண் மேனியுள்ளே
யறாத வருண் ஞானமதனல்

வெம்மை வளர் மூலவனல் வேதனை யகன்றுலகம்
வேண்டாத ஞானகுருவே
வேந்தே யென்னப்பா நல்வட லூரிருந்து நீ
விளையாடு மேன்மையதுதான்
வெம்பவமிலாக் குருதருஞ் சோற்றை சின்னம்மை
வேண்டியுட் கொண்ட திறனே
வேண்டுமிவ் வுலகமதில் மோனகுரு வாகுநீ
விமலகதி யருள்வை கண்டாய்
செம்மைவட லூரருட் பிரகாச வள்ளலே
சிறுபறை முழக்கியருளே
சிற்சொருப மாகிவள ரற்புதச் சோதிநீ
சிறுபறை முழக்கியருளே. (க)

பிச்சுலக மெச்சப் பிதற்று கின்றெனெனும்
பெருமைகொள் விருத்த மதனிற்
பேராத வாநந்த நித்திரை செயுந்திறம்
பேசு மவ்வுண்மை யறியேன்
நச்சுவிழி மாதரொடு கூடி யெந்நாளுமே
நாடித் துயின்ற துயிலும்
நாய்க்குமொரு பேய்க்குமுள ததனை யெந்நாளுமே
நாடிக் களித்து நாளும்
இச்சிக்கு மென்மனத் தாசைதனை நீக்கியே
யெளியேன் றனக்கருள் செயாய்
என் செய்கே னெந்தை நின்னருட் பாவி லொன்றினை
யியம்பி லென்னெஞ்ச முருகும்
செச்சைமலர்சூடி யருணச்சு மறுபவ முடையை
சிறுபறை முழக்கியருளே

சிற்சொரூப மாகிவள ரற்புதச் சோதிநீ
சிறுபறை முழக்கியருளே. (உ)

சத்து சித்தாநந்த வநுபவச் சோதியருள்
சரிதை நிலைநான்கு முதலாய்
சார்ந்தநிலை நந்நான்கு ஞானறிந்தே னெனுஞ்
சாந்த வநுபவ வருட்பா
சத்தறிகிலா வெமையுருக்கு மவ்வுண்மைதனை
சாமி நீ யறியாய் கொலொ
சந்நிதி தனிற்சென்று நான்பெற்ற பேறதனை
சாமி யறிவாரடி யெனுஞ்
சித்திதரு நின்பா வினிலேதனை நினைந்துருகி
சின்மயா நந்தநிலையை
சேர்வ தெந்நாளரிய சாமியருளாய் கொனீ
சித்திநிலை முழுது மருளும்
சித்தாந்த வேதாந்த சமரசப் பொருளே நீ
சிறுபறை முழக்கியருளே
சிற்சொரூப மாகிவள ரற்புதச் சோதிநீ
சிறுபறை முழக்கியருளே. (ஙூ)

சுத்தசன் மார்க்கமெச் சமய சன்மார்க்க மொடு
சோர்வில் மதசன் மார்க்கமும்
சொற்பொருள் விடுத்தோங்கி
நிற்கு மருள நுபவச் சொற்ப்ரகாசத் தலைவனே
அத்தனருளாலே மசித்தியுடல்,சித்தியுட
னழியா திருக்கவருளும்
அருமை யகலாமை யுறுசுத்த சன்மார்க்கனே
அப்பனே அருமருந்தே

வித்துமத சன்மார்க்க மாறனுட்டாமே
விளைந்த மதமளவில் கோடி
வேண்டாது மேலுயர்ந்துறு பொருள்விளக்கு மொரு
வேத முடிவான பொருளே
சித்தியருள் முத்திநிலை நன்றருள்செய் செல்வமே
சிறுபறை முழக்கியருளே
சிற்சொருப மாகிவள ரற்புதச் சோதிநீ
சிறுபறை முழக்கியருளே. (௪)

புகல் கர்ம்ம சித்தி சாகாக்கல் வியணிமாதி
புகழ்யோக சித்தியகலாப்
புனிதமுறு மெய்ஞ்ஞான சித்தியுயர் வகலாத
புவியுட் புதைத்த பிணமிச்
செகமீ தெழுப்பு மச்சுகஞான சித்தியின்
சீர்மை பன்னிரு வருடமே
சேர்ந்த முதலிரு நூற்றெ டெட்டாண்டிலா மெனச்
செப்பியருள் ஞானசித்தி
சுகமுறக் கொண் டிரண்டரை கடிகையளவிட்டு
சுகமாயிருந்த குருநீ
சொல்லுமா சித்திக ளநந்தமுஞ் செய்யாது
சுகியாயிருந்த வுளவு
சிகரமலை வாழ்சித்தர் முனிவரறிவார்கள் நீ
சிறுபறை முழக்கியருளே
சிற்சொருப மாகிவள ரற்புதச் சோதிநீ
சிறுபறை முழக்கியருளே. (௫)

நெற்றிக்கு நேர்நீண்ட புருவந் தனிற்கொண்ட
நிமலஞானக் கண்ணையே

நோய் திறக்கப் பெறிற்புவிக ளியாவுமே
நேர்நிற்கு மன்றியந்த
நற்றவ முறும்பெரியர் தயவோடு பார்க்கிலோ
நாசமுற்றிடு பிணங்கள்
நலியா தெழுந்துயிர்கள் பெற்றெழுந் துறுமென்று
நாடிப்புகன்று பின்னுஞ்
சற்றே சினங்கொள்ளி லுயிர்நாச மாகுமச்
சத்தியர்கள் கண்ணுக்குமே
சார்ந்தகத வும்பூட்டு முளததனை யருளான
தாழ்வினற் றிறவுகோலால்
செற்றே திறந்திடுதல் வேண்டுமென் றருளியநீ
சிறுபறை முழக்கியருளே
சிற்சொருப மாகிவள ரற்புதச் சோதிநீ
சிறுபறை முழக்கியருளே. (சா)

முழுமல முறப்பெறுவர் மூடப்பசுக்கள் மலம்
மூன்றுபங் குடையர்சீவர்
முதிருமுய ராத்மமல மொருபங் குடைத்தாய்
முடிந்துமும் மலமற்றதாய்
பழுதுறுச் சிவமொன் றெனக்கூறி பரமார்த்த
பரஞானவொளி சபையதிற்
பண்புறு மொளிக்குளொளி யாந்தெய்வ வொளியாகி
பாங்கான நடமதாகி
ஒழுகா வெளிக்குள்வெறு வெளியா யுயர்ந்தோங்கி
யொரு சச்சிதாநந்தநல்
ஓங்கார வடிவாகி சிவனீச் சுரனுகி
யோங்குமநு பூதிதன்னை

செழுமையுற வோதிய விராமலிங்கக் குருநீ
சிறுபறை முழக்கியருளே
சிற்சொருப மாகிவள ரற்புதச் சோதிநீ
சிறுபறை முழக்கியருளே. (எ)

**வேறு.**

தரைமுத லுதம நீருக் காணுத
ருனியமந் தானுந்
தானது நீங்குற னியம மரும்பொரு
டனையறி வதுஞானம்
வரையுறு மாதனம் அருள்வளர் ஞானம்
வளர்ந்துறு தெரிசனமே
வளமுறு ப்ராணு யாமந் தண்ணருள்
வாய்ந்துறு பரைநோக்கம்
புரையறு ப்ரத்யா காரம் பொலிவுறு
போக்கறு பரையோகம்
புலனுறு தாரணை யப்பரை நீக்கம்
புகழ்தியா னமதாகும்
குரையில் சமாதியவ் வின்பமதாமென
கொட்டுக சிறுபறையே
கோதறு வடலூரருட் பிரகாச நீ
கொட்டுக சிறுபறையே. (அ)

திருவளர் ஞானப்பிள்ளை முதற்பொரு
டேசுறு நால்வருமே
தீதக லொருமல மிருமலம் மும்மலந்
தெளிவுறு மலநான்கற்
றருவா யுருவா யருவுரு வாங்கதி
யழககலா துறவே

அன்புடன் பெற்றவ ராதலினங்ஙன
மவர் பின்ன வராகும்
ஒருமைபெறும் பொருடேறுதி யென்றரு
ளுயர் ஞானக் குறியின்
உயர் வறியா வுலகம்பே யென்பது
முண்மை கொலென்றருணீ
குருவளர் ஞானசிகாமணி யருண்மணி
கொட்டுக சிறுபறையே
கோதறு வடலூ ரருட்பிரகாச நீ
கொட்டுக சிறுபறையே. (௯)

கலைவளர் ஞானமுறும் பொருளாஞ்சிற்
ககனவெளிப் பொருளைக்
காணுதுலக மெலாம் போயுழலுங்
கற்பனை யாகுறுமிவ்
வலைவுறு மனமுண்ணெ கிழ்தலு மாகிநன்
காகும் பொருள் பத்தி
ஆருவன் பமைதாத்ம நெகிழ்ச்சிகொ
ளறிஞர வர்க்குளொளி
வலையுளகப் படும் வள்ளலரும் பொருள்
வாசக வாச்சியமாய்
வாழ் பொருளேழ் நிலைமாட மிருந்ததில்
வளரதி சயமறிவாய்
கொலைபுரியா வடலூரி லிருந்த நீ
கொட்டுக சிறுபறையே
கோதறு வடலூ ரருட் பிரகாச நீ
கொட்டுக சிறுபறையே. (௧0)

# சிறுதேருருட்டல்.

தூலவுடல பிண்டாண்ட பகிரண்ட முழுதுமே
தூக்கிச்செயுந் தெய்வநற்
றொழிலைந்தி னற்பாச மலபந்த மறவே
தொலைத் தருள்செய் தூயஞான
மூலமெனு மொருபொருட் டிருவருட் பிரகாச
மோனகுரு வானமுதலே
மூதறிஞ ருள்ளின்ப வாநந்த வெள்ளம்
முதிர்ந்தோங்க வங்ஙன முறாஉம்
ஆலமொத் துறுமூல பந்தங் கழற்றியரு
ளமுதகுண சாந்த மகலா
அமலவத் துவிதமுய ராநந்த வநுபவ
வருட்சோதி யான குருவே
சீலமுறு வேதாந்த நாதாந்த போதனே
சிறுதே ருருட்டி யருளே
செம்மைவளர் வடலூ ரருட்ப்ரகா சத்தலைவ
சிறுதே ருருட்டி யருளே. (க)

தங்குமுயர் வகலாத வுலகரத மதனிலே
தாங்குமரு ளாநந்த மாந்
தண்ணருட் சச்சிதா நந்தவுரு வாகுநீ
தண்மறைப் பரி பூட்டியே
அங்ஙனஞ் சாந்தியா தீதகலை யயனு
லடுத்தூர்ந் தூறச் செய்துநீஇ

ஆதித்த வருண்ஞான மண்டலந் தனையாழி
யாக்கி பொற்சோதி மலையை
பொங்கறி வெனுஞ்சேட னல்வளைத் தச்சேடன
புந்திதனு ளறி துயிலுமாற்
புண்ணியனே ஞானவம் பாக்கியரு ளிரதம்
பொருந்திநகை ஞான வனலாற்
சிங்கமே சீடர்முப் புரமுட லெரித்தருள்வை
சிறுதே ருருட்டி யருளே
செம்மைவளர் வடலூ ரருட்ப்ரகா சத்தலைவ
சிறுதே ருருட்டி யருளே. (உ)

அப்பன்வரு தருணமிஃ தெனுமருட் பாவதனி
லடியிற் குறித்த பொருடாள்
ஆர்க்குமரி தாகுமரி பிரமர்முத லியவறிஞ
ரகமகிழ்ந் திட வங்ஙனே
செப்புமுறு திருவருட் குருகளிப் பாலிங்கு
செத்தவர்கடா மெழுதலே
திண்ணமுணர் மனனே யெனப்புகன் றிட்டதனே
திண்மையென் றுணர்வ தெந்நாள்
இப்புவியி லெந்தையாம் எங்கள்குரு சாமியரு
ளின்னருட் பாவி லொன்றில்
எல்லாரு மறியவே யென்சாமி யெனதுதுரை
யென்றதில் குறித்த படியே
செப்புநா ழிகையிரண் டரையில் வெளியாக்குநீ
சிறுதே ருருட்டி யருளே
செம்மைவளர் வடலூ ரருட்ப்ரகா சத்தலைவ
சிறுதே ருருட்டி யருளே. (ங)

செத்தார்க ளெழுவரென கைத்தாளம் போடெனுந்
திரு வருட்பா வொன்றுமே
செகமுழுது மேபரவி ஜெயமெனும் பண்பதனை
தேர்ந்திடாச் சிறியர் தமையும்
பெத்தமுறு மலவுட லழித்திட் டுறுஞ்சிறுமை
பேராத நரகழுத்தி
பேர்த்துமுயி ருடலாதி தந்தவர்க் காமரிய
பேரின்ப முதவு மரசே
புத்தமுத மொழுகுமதி காரமல சுத்தமாய்ப்
போந்த வருண் ஞானமணியே
பொய்மையுறு மிப்புவியில் பொய்யுட லெடுத்தே
பொருந்திவாழ் பவர்க டமையே
சித்துருவ மாக்கியருள் சிவஞான வள்ளலே
சிறுதே ருருட்டி யருளே
செம்மைவளர் வடலூ ரருட்ப்ரகா சத்தலைவ
சிறுதே ருருட்டி யருளே. (௬)

கலைவல்ல கருணீக குலமுழுய்ந் துறவந்து
கருணைப் ப்ரகாச முறுநற்
கலையோக ப்ராணலய கர்ம்மத்தை நாட்டாது
காண்புறு நிராசை யொன்றை
மலைவற வுணர்த்தியருள் மகராஜ சிவயோக
மாண்புறு மிராம லிங்க
மாதேவ தேவனீ மாளாத தபுதுவ
மலக்கூட்டை மாளுறச் செய்

தலைவற விளக்குமரு ளைந்தொழி லியற்றியது
யதுவாதல் முத்தி யெனுநன்
கானபொரு ளுபதேச மங்ஙன முரைத்தாசை
யதனைப் பறித்து மதனூர்
சிலைவிற் கரும்பொடித் துறுநா ணறுத்தவா
சிறுதே ருருட்டி யருளே
செம்மைவளர் வடலூ ரருட்ப்ரகா சத்தலைவ
சிறுதே ருருட்டி யருளே. (௫)

கொந்தார் மலர்க்குழ லளிக்குழாங் குழறிமது
கோத்துண்டு தனை மறந்த
கொள்கைபோ லாநந்த முறுமருட் டேனுண்டு
குவலயா நந்தமாகும்
பந்தமறு மெய்ஞ்ஞான வாநந்த முடையாய்
பகர்ந்திடி லரிக்கு மரிதாம்
பார்க்கொணு வரியபர சாக்கிரங் கருணைவளர்
பரமசொற் பனமுதல தாம்
நந்தாத குருதுரிய வநுபவப் பொருளையே
நாடி யுறை வேதாந்தமே
நாடொணு துறுமகா வநுபவ நடுப்பொருளை
நான்பெறுவ தெங்ஙனரசே
சிந்தா வருட்சோதி மலைவீதி தன்னிலே
சிறுதே ருருட்டி யருளே
செம்மைவளர் வடலூ ரருட்ப்ரகா சத்தலைவ
சிறுதே ருருட்டி யருளே. (௬)

## வேறு.

நானற நீநா னென்றரு ளநுபவ
ஞானமொழிக் குருநீ
நன்குய ரறிவநீ யானுத் மாநஞ்
சிவமா நன்கதனைத்
தானறிவேதப் பொருண்மா வாக்ய்த்
தன்மை யுணர்த்தியருட்
டானே யதுவா யதுதா னுகுந்
தன்மையுருச் சத்தின்
மானருள் விந்துறு மோகினி யெனுமும்
மாயை யகற்றியருள்
மன்னு மலைப்பொருண் மாறுக் கதிதரு
மணியென் கண்மணியே
ஊனற வேயரு ளுண்மைப் பொருளை
யுருட்டுக சிறுதேரே
உத்தர ஞானச் சித்தி புரத்த
வுருட்டுக சிறுதேரே. (எ)

முப்பாழும் பாழென் றருண் மூலர்
முடிந்த பொருட்குளுறும்
மூதறி வுடையவர் நாடுறு மமல
முதிர்ந்திடு சடகோபர்
அப்பா லும்பா ழென்று ரறிவிலரி
லங்கறி பொருளதனை
யாரறிவா ரது தானறி யும்மது
தானே தானதுவாம்

தப்பா வநுபவ சாதக சாத்திய
சத்யமுறுங் கதியைத்
தந்தருள் சமரச வேதசன் மார்க்க
சமர்த்த சதாநந்த
ஒப்புயர் வில்லா வொருவ வென்னப்ப
வுருட்டுக சிறுதேரே
உத்தர ஞானச் சித்திபுரத்த
வுருட்டுக சிறுதேரே. (அ)

கொல்லா விரதக் குலநற் குலமென
கூறும் பெரியவர்தங்
குருமொழி யருண்மொழி யென்னுட் கொண்டே
கொலைசெய்வார் தமையும்
கொல்லுதல் பாவம் பார்த்த வினைக்குட்
கோப்புறு தோல்முகமே
தரிசுற நோக்குதல் பாவம் பாவந்
தூய்மை யிலாவந்தப்
பொல்லாப் பாவிக ளைத்தொட லுந்துயர்
போகாப் பெரும்பாவம்
புலை கொலை செய்பவ ரிடமுண்பவனும்
புலைகொலை யுடையவனென்
றுரல்கனி லருண்மொழி யோதும் பிள்ளை
யுருட்டுக சிறுதேரே
உத்தர ஞானச் சித்திபுரத்த
வுருட்டுக சிறுதேரே. (கூ)

வேத முதற்பொரு ளாறந்தம மதின்
    மீதானம் மதுவே
வேறுகாத விதிப் பொரு ளுண்மை
    விலாச மறைப்பொருணற்
பேதமிலாப் பொருள் ஞான விநோதப்
    பீடுறு சிவயோகம்
பேசறு மோனப் பெருவெளி யாகும்
    பேராச் சிவபோகம
ஏதமிலாச் சிவ தரிசன மாத்ம
    விலிங்க சிதம்பரமாய்
எங்கும் பொங்கி வழிந்து புரண்டு
    எழுந்துய ரெங்குருவென்
றோத வளர்ந்த வருட் பிரகாச
    வுருட்டுக சிறுதேரே
உத்தரஞானச் சித்தி புரத்த
    வுருட்டுக சிறுதேரே. (௧௦)

முற்றிற்று.